பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 07 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36-ஆக அதிகரித்துள்ளது.

2. வயநாட்டில் மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகளில் கேரள அரசுக்கு, மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் பொருளாதாரம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

4. மேட்டூர் அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை விரைவில் எட்டவுள்ள நிலையில், காவிரி கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டி **Pallekele** –ல் இன்று நடைபெறுகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் இன்று அதிகாலை நேரிட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 36-ஆக அதிகரித்துள்ளது.

காயங்களுடன் மீட்கப்பட்டுள்ள 66 பேருக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கு உதவும் வகையில் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது தொடர்பாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனுடன் தாம் ஆலோசனை மேற்கொண்டதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

கேரள அரசுக்கு, மத்திய அரசு அனைத்து உதவிகளையும் அளிக்கும் என்று தாம் உறுதியளித்ததாக திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

இந்த நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, காயமடைந்தோர் விரைவாக குணமடைய தாம் பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல தலைவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் போர்கால அடிப்படையில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அவர்களுக்கு உதவும் வகையில் மற்றொரு மீட்புக்குழு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வயநாடு நிலச்சரிவில் மீட்பு நடவடிக்கைகளில் ராணுவத்தை ஈடுபடுத்துவது தொடர்பாக, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதியுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

இதையடுத்து, ராணுவ குழுக்கள் தற்போது நடைபெற்றுவரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் விரைவில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன், அம்மாநில பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு ஐந்து பேர் கொண்ட அமைச்சர்கள் குழு விரைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மாநிலங்களவை இன்று காலை கூடியதும், வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிலச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்தது தம்மை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளதாக மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

நிலச்சரிவில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, பேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள், வயநாட்டில் மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகளை அரசு விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்.

<<<<<<>>>>>

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்றுவரும் பட்ஜெட்டுக்கு பிந்தைய மாநாட்டின் தொடக்க அமர்வில் தற்போது உரையாற்றி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இதனை கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பலர் காணொலி வாயிலாக கலந்து கொள்கின்றனர்.

<<<<<<>>>>>

மக்களவையில் இன்று நடப்பாண்டு பட்ஜெட் தொடர்பான விவாதத்திற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் விளக்கம் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 23-ஆம் தேதியன்று மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட போது, வேளாண் உற்பத்தி, வேலைவாய்ப்பு, நகர்ப்புற மேம்பாடு, மின் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு உட்பட ஒன்பது அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏழைகள், மகளிர், இளையோர், விவசாயிகளின் முன்னேற்றத்தில் அரசு கவனம் செலுத்தி வருவதாகவும், பட்ஜெட் தாக்கலின்போது திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

நாட்டின் பொருளாதாரம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்தாண்டுகளுக்கு முன்னர் பலவீனமான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரத்தை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வலுவானதாக மாற்றியிருப்பதாக தெரிவித்தார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சியில் இருந்தபோது, நிதி பற்றாக்குறை, பணவீக்கம் மற்றும் ஊழலால் நாடு பாதிப்புகளை எதிர்கொண்டதாக திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

கோவை மாவட்டம், வால்பாறை அருகே இடது கரைப் பகுதியில் இன்று அதிகாலை ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர்.

பொள்ளாச்சி அருகே திப்பம்பட்டி கிராமத்தில் கனமழை காரணமாக வீட்டுச்சுவர் இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த இருவேறு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 68 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதையடுத்து, கரையோரப்பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - தருமபுரி தண்டபாணி – 45 செகண்ட்ஸ்)*

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை விரைவில் எட்டவுள்ள நிலையில், அணையிலிருந்து அதிக அளவில் உபரி நீர் வெளியேற்றப்பட உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, காவிரி கரையோரப்பகுதிகளில் வசிக்கும் 11 மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - விஜயகுமார் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

ஜார்க்கண்ட் மாநிலத்தில் நேரிட்ட ரயில் விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

**Barabamdo – Kharsawa** ரயில் நிலையங்களுக்கு இடையே **Potobeda** என்ற இடத்தில் இன்று அதிகாலை மும்பை ஹவுரா ரயில் மீது சரக்கு ரயில் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பல்லேகலே-வில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

---------

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியின் 10 மீட்டர் கலப்புக் குழுப் பிரிவில் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் மனுபாக்கர் - **Sarabjot Singh** இணை, இன்று தென்கொரிய இணையை எதிர்கொள்கிறது.

துடுப்பு படகுப் போட்டியின் காலிறுதியில் இந்தியாவின் பல்ராஜ் பன்வார் இன்று பங்கேற்கிறார்.

ஹாக்கி போட்டியில் இந்தியா – அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

வில்வித்தை, பேட்மிண்டன், குத்துச்சண்டை உள்ளிட்ட போட்டிகளிலும் இந்திய வீரர்கள் பஙகேற்கின்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மணிக்கா பத்ரா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

----------

தைவான் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சித்தார்த் ராவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் திருப்பூர் அணி இன்று கோவை அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>**